T.C: 135

070/DD/20

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

# DEPARTMENTAL EXAMINATIONS
# TAMIL NADU MARITIME BOARD TEST – HIGHER GRADE

(With Books)

Maximum Time : 2.30 hours — Maximum Marks : 100

## *IMPORTANT INSTRUCTIONS*

## DESCRIPTIVE TYPE
விரிவான விடையளிக்கும் வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**

வினாக்களுக்கு விடையளிக்க தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாக படிக்கவும்.

1. Answers in excess of the prescribed number of questions appearing at the end of the answer book will not be valued.

   விடைகளை குறிப்பிட்டுள்ள எண்ணிக்கைக்கு அதிகமாக எழுதியிருப்பின், விடைத்தாளின் இறுதியில் உள்ள அதிக எண்ணிக்கையிலான விடைகள் மதிப்பீடு செய்யப்படாது.

2. Answer should be in brief and to the point and need not be a verbatim reproduction of printed pages. (Applicable for tests to be answered "with books" only).

   விடைகள் சுருக்கமாகவும், வினாவிற்கு உரிய அளவிலும் இருக்க வேண்டும். புத்தகத்தில் உள்ளவற்றை அப்படியே வார்த்தைக்கு வார்த்தை திரும்ப எழுதக் கூடாது. (இக்குறிப்பு புத்தகங்களுடன் எழுதும் தேர்விற்கு மட்டும் பொருந்தும்)

3. In case of doubt, English version is the final.

   வினாக்களில் சந்தேகமிருப்பின் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

[Turn over

I. **Answer any SIX questions each carry 4 marks.** **(6 × 4 = 24)**

ஏதேனும் ஆறு வினாக்களுக்கு விடையளிக்க ஒவ்வொன்றிற்கும் 4 மதிப்பெண்கள்.

1. "Fire Arms discharged in an Indian port illegally" – Explain under Indian Ports Act 1908.

   "இந்தியத் துறைமுகத்தில் சட்ட விரோதமாக இறக்குமதி செய்த சுடும் ஆயுதங்கள் " குறித்து இந்தியத் துறைமுகச் சட்டம் 1908ன்படி விளக்குக.

2. What is called Wreck under Merchant Shipping Act 1958?

   வணிகக் கப்பல் சட்டம் 1958ன்படி, சிதைவுகள் என்றால் என்ன?

3. What are the Principal Types of Marks in Lateral System?

   பக்கவாட்டு அமைப்பில் உள்ள குறியீட்டிற்கான முதன்மையான வகைகள் யாவை?

4. What is the Procedure for Cash Verification in the Minor Ports?

   சிறுதுறைமுகங்களில் பண சரிபார்புக்கான நடைமுறைகள் யாவை?

5. Is there any possibility by Tamil Nadu Maritime Board to give concessional rate? Brief.

   தமிழ்நாடு கடல்சார் வாரியத்தால் கட்டண சலுகைகள் வழங்க இயலுமா? சுருக்கமாக விளக்கவும்.

6. Mention atleast 8 Light Houses maintained by Directorate General of Light Houses and Light Ships along the Coast of Tamil Nadu.

   தமிழ்நாட்டின் கடற்கரையோரத்தில், கலங்கரை விளக்கம் மற்றும் ஒளி கப்பல்கள் இயக்குநரகத்தால் பராமரிக்கப்படும் ஏதேனும் 8 கலங்கரை விளக்கங்களை குறிப்பிடுக.

7. Who are prohibited for embarkation or re-embarkation on any ship by the Health Officer?

   சுகாதார அதிகாரியால் கப்பலில் ஏற்றுவதற்கு அல்லது இறக்குவதற்கு தடைசெய்யப்பட்டவர்கள் யாவர்?

8. Write the meaning of the following under International code of Signals 1969. XV, ZT, Q, QQ.

சர்வதேச குறியீடுகள் 1969ன்படி, கீழ்க்காண்பனவற்றின் பொருள் யாவை?

XV, ZT, Q, QQ.

II. **Answer any SIX questions each carry 6 marks :** **(6 × 6 = 36)**

ஏதேனும் ஆறு வினாக்களுக்கு விடையளிக்க ஒவ்வொன்றிற்க்கும் 6 மதிப்பெண்கள் :

1. Mention the Ports Declared in Thiruvallur, Chennai and Tuticorin Districts under Major Ports Act 1963 and Indian Ports Act 1908.

பெருந்துறைமுகங்கள் சட்டம் 1963 மற்றும் இந்திய துறைமுகச் சட்டம் 1908ன்படி திருவள்ளூர், சென்னை மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் அறிவிக்கப்பட்ட துறைமுகங்களை குறிப்பிடவும்.

2. Under Merchant Shipping Act 1958, What is Mercantile Marine Department? Mention its offices located in Tamil Nadu.

வணிகக் கப்பல் சட்டம் 1958ன்படி, கடல் வாணிப துறை என்றால் என்ன? தமிழ்நாட்டில் அமைந்துள்ள அதன் அலுவலகங்களைக் குறிப்பிடுக.

3. Name the classification societies (Recognised Organisations) which are given powers to carryout statutory surveys below 5000 GRT Indian Vessels by Directorate General of Shipping.

கப்பல் இயக்குநரகத்தின்படி, பதிவு செய்யப்பட்ட மொத்த எடை 5000க்கு கீழ் உள்ள இந்திய கப்பல்களுக்கு சட்டப்பூர்வ ஆய்வை மேற்கொள்வதற்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ள வகைப்படுத்தப்பட்ட சங்கங்களை (அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள்) குறிப்பிடுக.

4. For handling Sailing Vessels and Steam (Mechanised) Vessels at Pamban, what are the factors a Pilot should see.

பாம்பன் துறைமுகத்தில் பாய்மரக் கப்பல் மற்றும் நீராவி (இயந்திரமயமாக்கல்) கப்பல்களை கையாளுவதற்கு, வழிகாட்டி பார்க்க வேண்டிய காரணிகள் யாவை?

5. How the Government permit Tamil Nadu Maritime Board to make rules? How is it possible legally?

தமிழ்நாட்டின் கடல்சார் வாரியம் விதிகளை விதிப்பதற்கு அரசு எவ்வாறு அனுமதிக்கிறது? சட்டபூர்வமாக அது எப்படி சாத்தியமாகும்?

6. What is Light dues? Who collect the Light dues? Are Indian Vessels exempted? – Explain.

கலங்கரை விளக்கத் தீர்வை என்றால் என்ன? கலங்கரை விளக்கத் தீர்வையை யார் வசூலிக்கிறார்கள்? இதில் இந்திய கப்பல்களுக்கு விலக்குண்டா? விளக்குக.

7. What are the basic Health questions need to be answered by the Master of a Ship calling a Port? Explain.

ஒரு துறைமுகத்தை அழைக்கும் போது, எந்தெந்த அடிப்படை சுகாதார கேள்விகளுக்கு, ஒரு கப்பல் மாலுமி பதில் அளிக்க வேண்டியுள்ளது? விளக்குக.

**III. Answer any FOUR questions each carry 10 marks : (4 × 10 = 40)**

**ஏதேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்க ஒவ்வொன்றிற்க்கும் 10 மதிப்பெண்கள் :**

1. An entrepreneur has developed a Green field Port in Thiruvallur District at a investment of Rs.2,500 crores. He was allotted 4 kms of water front. After obtaining all statutory clearances, the Port became operational from 1st July 2017. The developer exercised option 2 of the tariff system in handling containers and during the month of July 2017 they have handled.

20 foot container (empty) – 235 Nos

40 foot container (empty) – 444 Nos

20 foot container (loaded reefer) – 856 Nos

40 foot container (loaded) – 587 Nos

Also, unloaded 50000 Metric tonnes of Steel coils

They have earned a revenue of Rs.15 crores during the month of July 2017. Calculate the revenue to Tamil Nadu Maritime Board from the above details.

ஒரு தொழில் முனைவோர் திருவள்ளூர் மாவட்டத்தில் 2,500 கோடி ரூபாய் முதலீட்டில் பசுமை துறைமுகம் ஒன்றை உருவாக்கியுள்ளார். அவருக்கு 4 கி.மீ. நீள கடற்கரை பகுதி ஒதுக்கப்பட்டது. அனைத்து சட்டப்பூர்வ அனுமதிகளையும் பெற்ற பிறகு, துறைமுகம் 2017ம் ஆண்டு ஜூலை 1ம் தேதி முதல் செயல்படத் தொடங்கியது. தற்போதைய கட்டண விகிதத்தில் சரக்குப் பெட்டகங்கள் கையாள்வதில் விருப்பம் 2 ஐ தேர்ந்தெடுத்தார். ஜூலை 2017ல் பின்வரும் சரக்குகளைக் கையாண்டார்.

20 அடி சரக்குப் பெட்டகம் (காலியாக) – 235 எண்கள்

40 அடி சரக்குப் பெட்டகம் (காலியாக) – 444 எண்கள்

20 அடி சரக்குப் பெட்டகம் (ஏற்றப்பட்ட) – 856 எண்கள்

40 அடி சரக்குப் பெட்டகம் (ஏற்றப்பட்ட) – 587 எண்கள்

மேலும், 50000 மெட்ரிக் டன்கள் எஃகு சுருள்கள் இறக்குமதி செய்யப்பட்டது.

ஜூலை, 2017ம் மாதத்தில் ரூ.15 கோடி வருவாயை பெற்றுள்ளார்கள். மேலே குறிப்பிடப்பட்ட விவரங்களிலிருந்து, தமிழ்நாடு கடல்சார் வாரியத்திற்குரிய வருவாயினைக் கணக்கிடுக.

2. A cutter-suction dredger with Gross Registered Tonnage 485 was built, launched, registerd as Harbour Craft and entry made for the dredger in Nagapattinam port by using 0.5 km × 500 metres size of land for a period of one year (after 01.04.2017) by executing a license agreement and using the slipway from 01.04.2017 to 30.06.2017. Calculate the revenue to Tamil Nadu Maritime Board from the above details.

0.5 கி.மீ. × 500 மீட்டர் அளவு நிலத்தினை ஒரு வருட ஒப்பந்தத்திற்கு எடுத்து (01.04.2017க்குப் பின்) பயன்படுத்தி, 485 பதிவு செய்யப்பட்ட மொத்த எடை கொண்ட வெட்டி–உறிஞ்சும் தூர்வாரி கட்டப்பட்டு, கடலில் இறக்கப்பட்டு, துறைமுக மரக்கல விதிகளின்படி பதிவு செய்யப்பட்டு, நாகப்பட்டினம் துறைமுகத்தில் நுழைவு சான்று பெற்றது. 01.04.2017 முதல் 30.06.2017 வரை நாகப்பட்டினம் துறைமுகத்தின் வழுக்கு பாதையினை பயன்படுத்தியது.

மேற்கூறிய விவரங்கள் மூலம் தமிழ்நாடு கடல்சார் வாரியத்திற்கான வருவாயினைக் கணக்கிடுக.

3. What are the Powers of Marine Board in India?

இந்தியாவில் கடல்வழி வாரியத்திற்கான அதிகாரங்கள் யாவை?

4. M.V. TIGER sank within Rameswaram Port Limits. You are aware of place and time of incidence, GPS Position and affected Chart. As Port Conservator of Rameswaram, report to the National Hydrographic Office in a Proper form with all relevant details.

எம்.வி. டைகர் இராமேசுவரம் துறைமுக எல்லைக்குள் மூழ்கியது. அந்நிகழ்வின் இடம் மற்றும் நேரம் ஜி.பி.எஸ். நிலை மற்றும் பாதிக்கப்பட்ட அட்டவணை ஆகியவற்றை அறிந்துள்ளீர். இராமேசுவர துறைமுகப் பாதுகாப்பாளராக இந்நிகழ்வினை அனைத்து விவரமான விவரங்களுடன் முறையான வடிவத்தில் தேசிய நீர்வழி அலுவலகத்திற்கு அறிக்கை தயார் செய்யவும்.

5. At 1300 hrs on 10.09.2017, a Barge (Harbour Craft NG 150) loaded with Copra Cake 300 Metric Tonnes from a mother vessel at Nagapattinam Anchorage, before entering to the Port channel, sank completely. All the six crew have been rescued. The owner of the Harbour Craft Shri Kumar, reaches the Port Officer immediately and lodges a Protest – Explain.

நாகப்பட்டினம் துறைமுகத்தில் நங்கூரமிட்ட கப்பலில் இருந்து 300 மெட்ரிக் டன்கள் புண்ணாக்கு ஏற்றிக் கொண்டு வந்த ஒரு மிதவை (துறைமுக மரக்கல எண்.என்.ஜி 150), துறைமுகத்தில் நுழைவதற்கு முன்னர் 10.09.2017 அன்று 1300 மணியளவில் முழுவதுமாக மூழ்கியது. அதிலிருந்து 6 ஊழியர்களும் மீட்கப்பட்டார்கள். துறைமுக மரக்கல உரிமையாளரான திரு.குமார் உடனடியாக துறைமுக அலுவலரிடம் சென்று தனது எதிர்ப்பைத் தாக்கல் செய்கிறார் – விளக்குக.

---